**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-05032021-3641

Volume: 5

Issue: 3

Month: January

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.11.2020

Accepted: 22.11.2020

Published: 01.01.2021

Citation:
Anandakumar, S and G. Ramakrishnan. "Tribes and Other Communities - An Overview." *Shanlax International Journal of Tamil Research,* vol. 5, no. 3, 2021, pp. 49–52.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i3.3641

*Corresponding Author:
anandsaduragiri7@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Tribes and Other Communities - An Overview

**S. Anandakumar**
*Ph.D., Research Scholar, Department of History*
*Saraswathi Narayanan College, Perungudi, Madurai, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0002-2503-5213

**Dr. G. Ramakrishnan**
*Assistant Professor, School of Historical Studies*
*Madurai Kamaraj University, Madurai, Tamil Nadu, India*

**Abstract:** India has one of the largest concentrations of tribal population in the world after Africa. The Tribal areas of India are mostly sheltered and remote, as a result of it a very little is known about their conditions and problems. The tribes are more compared not only in relation to the general population, but also compared with scheduled caste, the other acknowledged backward social group with constitutional protection. Tamil Nadu is one of the major states of the southern zone in India, consists of important tribal groups. The tribal areas of Tamil Nadu can be broadly divided into two major geographical dimensions such as the eastern coastal line and the mountainous regions of the north and west. The average elevation of the Eastern Ghats is 2000 feet and the highest peak is 6000 feet. This range is not continuous in Tamil Nadu. The Indian Sub-continent, in the Indian geographical area of Tamil Nadu covers about 1, 30,000 sq kms, representing nearly four percent of the total geographical area. There are more than 40 different tribes in Tamil Nadu. Scholars believe that most languages are closely related to Tamil and belong to the Dravidian language family.

**Key Words:** Tamil Nadu, Folklore, Anthropology, Tribal peoples, Nomadic tribal, Indigenous people, An equality system, tamilnadu tribes

**Reference Books**

1. Anthony King, D. (1976). London, Colonial Urban Development.
2. Blanford, HF. (1859). Survey Report M.JL.S. XV. 75, The Nilgiris.
3. Cryilnanmony, (2005). New Delhi, Dalits, and Tribes of India.
4. Devasahayam, N. (2006). Chennai, The Tamilnadu Tribes, Vol, XVI.
5. Francis, W. (2002). The Nilgiris, , New Delhi, Madras District Gazetteers.
6. Gopalakrishnan, M. (1995). The Nilgiris District Gazetteer, Madras.
7. Sharma, BD. (1997). Tribal Society in India, New Delhi, Manak Publications Pvt. Ltd.,
8. Bakshi, SR and Kiran Bala. (2000). Social and Economic Development of Scheduled Tribes, New Delhi, Deep and Deep Publications Pvt. Ltd.,
9. Beteille, (1960), Andre, The definition of tribe, seminar -14.
10. Bose, NK. (1972). Some Indian Tribes. Delhi: Nat Book Trust.

# பழங்குடிகளும் பொது வெளிச்சமூகமும் – ஒரு பார்வை

**ச. ஆனந்தகுமார்**
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், வரலாற்றுத்துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை

**முனைவர் கோ. ராமகிருஷ்ணன்**
உதவிப் பேராசிரியர்
சரஸ்வதி நாராயணன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பெருங்குடி, மதுரை

***ஆய்வுச் சுருக்கம்:*** *இந்தியாவின் தெற்கு மண்டலத்தின் முக்கிய மாநிலங்களில் ஒன்றான தமிழகம், முக்கியமான பழங்குடியினக் குழுக்களைக் கொண்டுள்ளது. தமிழ்நாட்டின் பழங்குடிப் பகுதிகளை கிழக்கு கடலோரக் கோடு மற்றும் வடக்கு மற்றும் மேற்கின் மலைப் பகுதிகள் போன்ற இரண்டு முக்கிய புவியியல் பரிமாணங்களாகப் பிரிக்கலாம். தமிழ் நாட்டில் வாழ்ந்து வரும் பழங்குடியினர் பற்றியும் பிற சமூகத்தினரின் பழங்குடி மக்கள் பற்றிய புரிதலையும் இக்கட்டுரை விளக்குகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ்நாடு, நாட்டுப்புறவியல், மானிடவியல், பழங்குடி மக்கள், நாடோடி பழங்குடி, தொல்பழங்குடி மக்கள், சமத்துவ அமைப்பு.*

மனிதன் பழங்கால வாழ்க்கை முறைகளிலிருந்து வளர்ந்துவரும் மாற்றங்களைக் கண்டு வாழ்க்கையை நெறிபடுத்திக் கொண்டவர்கள் பழங்குடிகள். இவர்கள் வாழும் இடங்களை மையபடுத்திச் சூழ்நிலைக்கு எற்ப இவர்களின் சமூக அமைப்பு, பண்பாடு காணப்படுகின்றன. பழங்குடி மக்கள் என்றால் விலங்குகளின் எலும்புகளை உடலில் அணிகலனாக அணிந்துகொண்டு புரியாத மொழியில் பேசி நடனம் ஆடிக்கொண்டு இருக்கிறவர்கள் என்ற பொதுப்புத்தி நிலவுகிறது. புழங்குடிகளும் பொதுவெளிச் சமூகத்தில் எல்லோரும் போன்று இருக்கக்கூடிய சாதாரண மக்கள் தான். இலை தலைகளையும், மரப்பட்டை களையும், விலங்குகளின் தோலையும் அரைகுரை ஆடைகளாக உடுத்திக்கொண்டு இருக்கிறவர்கள் ஆதிவாசிகள், பழங்குடிகள் எனக் குறிக்கப்படுகின்றனர். ஆனால் இன்றைக்கு அவர்களுடைய வாழ்க்கை நிலையில் நிறைய மாற்றங்களை உருவாக்கி வாழ்ந்து வருகிறார்கள்.

ஆதிவாசி, காட்டுவாசி, முதுகுடி, பழங்குடி, வனவாசி, மலைமக்கள் இப்படி பல பெயர்களில் இவர்கள் அழைக்கப்படுகிறார்கள். மலைவாழ் மக்கள் தான் பூர்வகுடிகள். பழங்காலத் தமிழ்ச் சமூகம் அவர்களுடைய நிலபரப்பிற்கு ஏற்றவாறு வாழ்க்கை முறைகளையும் பண்பாட்டையும் அமைத்ததாகச் சங்க இலக்கியத்தின் ஐந்திணைக் கோட்பாடு எடுத்துக் காட்டுகிறது. இனக்குழுச் சமூகமாகப் பாரம்பரியபண்பாடுஅடையாளங்களோடு இருக்கின்ற பூர்வகுடிகள்தான் பெரும்பான்மையான பழங்குடி மக்கள்.

**மலையும் மலைசார்ந்த பகுதியுமான - குறிஞ்சி**
**வனமும் வனம் சார்ந்த பகுதியுமான - முல்லை**

பாலை நிலத்திலும் பழங்குடி மக்கள் இயற்க்கையோடு ஒன்றி வாழ்கிறார்கள். தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள

ஆயர், திருக்குறளில் சொல்லப்பட்ட வேட்டுவர் மற்றும் குறிஞ்சி நிலக்கிழவன், முல்லை நிலக்கோவர், கானக்குறவர், எயினர், எபிலி, எயிற்றியர், ஆயர், ஆவியர், ஆய்மகள், பலையர், இடையர், இடைமகன், இடைமகள், கானக்கறவர், சிறுகுடி குறவன், கோவலர், கோசர், கோயன், கோயமான், வேட்டுவர், வேடர், காணக்காரர், மழவர் இப்படி பல பெயர்களைச் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. எளிமையான வாழக்கைமுறை ஆண், பெண் சமத்துவம், (விரும்பும் நபரையே திருமணம் செய்யும் உரிமை) சாதிபாகுபாடே இல்லாத சமத்துவ அமைப்பு, பாரம்பரிய மருத்துவ அறிவு இப்படி பல்வேறு சிறப்புகளுடன் வாழ்கிறார்கள் பழங்குடிகள்.

பழங்குடிகள் எனப் பொதுவாக கூறினாலும் இந்தப் பழங்குடிகள் அனைவரும் ஒரே இனம் கிடையாது. பன்முகப்பட்ட தன்மைகளையும் பழக்க வழக்கங்களை கொண்டுக் அடையாளங்களோடு வாழ்கிறார்கள்.

இந்தியாவில் பல்வேறு பழங்குடி இனங்கள் இருக்கிறார்கள். வடகிழக்கு மாநிலங்களில் பழங்குடிகள் அதிக அளவில் இருக்கிறார்கள். தமிழ்நாட்டின் மக்கள் தொகை அடிப்படையில் பழங்குடிகளுடைய எண்ணிக்கை மிகவும் குறைவு. கடந்த 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பு 7, 94, 697 பழங்குடிகள் தமிழ்நாட்டில் இருக்கிறதாகக் கூறுகிறது. இது தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையோடு கணக்கிடும்போது 1.1% முப்பதுக்கும் மேற்ப்பட்ட பழங்குடி இனங்கள் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். நீலகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, சேலம், நாமக்கல் மாவட்டங்களில் அதிகமாகவும் கோயம்பாத்தூர், தேனி, திண்டுக்கல், விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, போன்ற மேற்கு தொடர்ச்சி மலையோர மாவட்டங்களில் பரவலாகப் பழங்குடி மக்கள் காணப்படுகிறார்கள்

பழங்குடி மக்களில் பெரும்பான்மை இனமான மலையாளி (3,10,042) (47.6%), இருளர்கள் (1,55,606), காட்டுநாயக்கன் (45,227), பணியர் (9,121) குறும்பன் (24,963), கொண்டாரெட்டிகள் (31,526), இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் சில பழங் குடிகள் குறைவான எண்ணிக்கையில் வாழ்கிறார்கள்.

(உ-ம்)

அரநாடன் - 140, குடிமலைக்குடி - 126, மன்னான் - 82, கொச்சுவேலன் - 133, கொரகர் - 159, மகாமலசர் - 183, பள்ளேயன் - 339, மலைக்கண்டி - 464, கொண்ட காபு - 516, காடர் - 760, கோத்தர் - 925

நாடோடி பழங்குடிகளாக இருக்கின்ற வாகிரி, சிக்காரி ஆகிய நரிக்குறவர்களும், சுகாரி, பஞ்சாரா ஆகிய லம்பாடி மக்களும் தமிழ்நாட்டுப் பழங்குடி பட்டியலில் சேர்க்கப்படவில்லை. தோடர், இருளர், காடர், காட்டுநாயக்கர், குறும்பர், மற்றும் பணியர் ஆகிய ஆறு பழங்குடிகளை இந்திய அரசு Particularly Vulnerable Tribe Group (PVTG) (மிக விரைவில் அழிந்து போகக்கூடிய பழங்குடிகள் என வரையறுத்துள்ளார்கள்). தொன்மையான வரலாற்று அடையாளங்களைக் கொண்ட தொல்பழங்குடி மக்கள் மேற்க்கு தொடர்ச்சி மலைகளிலும் கிழக்கு தொடர்ச்சி மலைகளிலும் வாழ்ந்து வருகிறார்கள்.

தர்மபுரி மாவட்டம் (ஒக்கேனக்கல்), கிருஷ்ணகிரி (மல்லல்லி) ஆகிய பகுதிளில் இருளர் மக்களும், திருநெல்வேலி மாவட்டம் (புளியங்குடி கோட்டமலை) பளியர் மக்களும் இன்றும் குகைகளில் வாழ்ந்து வருகிறார்கள். பெரும்பாலும் விளங்குகள், பறவைகளை வேட்டையாடுதல், இயற்கை வனங்களில் இருந்து தேன் எடுத்தல், கிழங்கு எடுத்தல், மீன்பிடித்தல் போன்ற தொழில்களைச் செய்து வருகிறார்கள். மீன்களைத் தடியால் அடித்தும், துணிகளை ஏந்தியும் மீன் பிடித்தாலும்கூட அவர்கள்

சொக்க வைத்து மீன் பிடித்தல் என்பது அவர்களின் தனிச்சிறப்பு ஆகும். ஆறு மற்றும் ஓடைகளில் தண்ணீர் ஆழமாகத் தேங்கியுள்ள பகுதியை "மடுவு" என்கிறார்கள். அந்த பகுதியில் சொக்கு மரப்பட்டையைக் கசக்கி போட்டவுடன் மீன்கள் சொக்கி போகும். அதாவது மயங்கியநிலைக்குச் சென்றுவிடும். உடனே பெரிய மீன்கள் அனைத்தையும் பிடித்துவிடுவார்கள். சின்ன மீன்கள் சிறிது நேரத்தில் மயக்கம் தெளிந்து ஓடிவிடும். (சொக்கு பொடி போட்டு மயக்கணும் என்ற தொடர் இதனால்தான் வழக்கத்திற்கு வந்திருக்கலாம்). கொத்து காடுகள், புணல்காடுகள் ஆகிய பெயர்களில் மலைநெல், மலை வாழை, பழா, கேழ் விரகு, திணை, சோளம், ஆகிய பயிர்களைச் சில இடங்களில் வேளாண்மை செய்கிறார்கள். பழங்குடி மக்களின் கிராமங்கள் பதி, ஊர், நாடு, மந்து ஆகிய வார்த்தைகளில் முடியும். மலை, வனம், காற்று, மலை, இடி போன்ற இயற்கை அமைப்பை இவர்கள் தெய்வங்களாக வழிபடுகிறார்கள்.

மதையான், மாரியம்மாள், முனீஸ்வரன், கோடையம்மன், மாசானியம்மன், பசோஸ்வரன், மாகாளியம்மன் ஆகிய தெய்வங்களுக்கு கோவில்கள் எழுப்பி வழிபட்டு வந்தாலும்கூட இவர்களுக்கு என்று தனி மத அடையாளம் கிடையாது. காட்டுக்குள் வேடடையாட செல்லும்வேலையில் ஒருவருக்கு ஒருவர் தகவல்களைப் பறிமாறிக்கொள்ள "குக்கூ" என்ற சத்தமிடும் முறையைப் பின்பற்றுகிறார்கள்.

தமிழ்நாட்டில் காடர், இருளர், மலசர், காணிக்காரன், மலைவேடன், மலைக்குறவன், சோளகர் போன்ற பழங்குடி இனங்கள் பூர்வீகமாகக் காடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். முதுவர், மலையாளி, பளியர், காட்டுநாயக்கன், பணியர், குறும்பர் போன்ற பழங்குடிகள் சமவெளி பகுதியில் வாழ்ந்து வருகிறார்கள். சிலர் வாழ்வியல் நெருக்கடிகள் காரணமாக சமவெளியில் வாழமுடியாமல் மறுபடியும் காடுகளிலே குடியேறினார்கள். காட்டில் வசிக்க கூடிய பழங்குடி மக்கள் சந்தோசமாக வாழ்ந்தாலும்கூட வனச் சட்டங்கள், தொழிற் வளர்ச்சி திட்டங்கள், சுற்றுலா இப்படி பல செயல்களில் பழங்குடி மக்களுக்கு இன்று சிக்கல்கள் உருவாகிக் கொண்டேதான் இருக்கின்றன. இயற்கை மற்றும் காடுகளைப் பாதுகாப்பது முக்கிய இயற்கையைத் தன் ஊராகவும் வீடாகவும் எண்ணி வாழ்ந்துவரும் மூதாதையர் பழங்குடி மக்கள் ஆவார்.

## குறிப்புகள்

1. அந்தோனி கிங். (1976). லண்டன், காலனித்துவ நகர அபிவிருத்தி.
2. பிளான்போர்ட், எச்.எஃப். (1859). சர்வே அறிக்கை, நீலகிரி, எம்.ஜே. எல்.எஸ். எக்ஸ்.வி. 75, .
3. கிரைல்நாமனி. (2005). புது தில்லி, தலித்துகள் மற்றும் இந்திய பழங்குடியினர்.
4. தேவசகாயம், ந. (2006) தமிழ்நாடு பழங்குடியினர், சென்னை, தொகுதி, ஓஏஐ.
5. பிரான்சிஸ். (2002.) நீலகிரிஸ், புது தில்லி, மெட்ராஸ் மாவட்ட வர்த்தமானிகள்.
6. கோபாலகிருஷ்ணன். (1995). மெட்ராஸ், நீலகிரி மாவட்ட வர்த்தமானி.
7. ஷர்மா. (1997). இந்தியாவில் பழங்குடியினர் சங்கம், புது தில்லி, மானக் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்.
8. பக்சி மற்றும் கிரண் பாலா. (2000). பட்டியல் பழங்குடியினரின் சமூக மற்றும் பொருளாதார மேம்பாடு, புது தில்லி, தீப்[1] தீப் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட், .
9. பீட்டீல். (1960). ஆண்ட்ரே, பழங்குடியினரின் வரையறை, கருத்தரங்கு.
10. போஸ், (1972). சில இந்திய பழங்குடியினர். டெல்லி, நாஷனல் புக் டிரஸ்ட்